செ. கு. எண்: 177 நாள்: 19.10.2018

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை –19.10.2018

**மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களிலுள்ள** பெரியாறு பிரதான பாசன பகுதிகளில் கடந்த ஏழு ஆண்டுகளாக போதிய மழை இல்லாத காரணத்தினால் நிலத்தடி நீர் கிடைக்கப் பெறவில்லை என்றும் குடிநீர் தேவைக்காக வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுமாறும் வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களிலுள்ள பெரியாறு நீட்டிப்பு பாசன பகுதிகளுக்கு குடிநீர்த் தேவைக்காக மொத்தம் **345.60 மி.க. அடிக்கு** மிகாமல் வைகை அணையிலிருந்து வினாடிக்கு 200 கஅடி வீதம் **22.10.2018** முதல் 20 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

குடிநீர் தேவைக்காக திறந்துவிடப்படும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு வேளாண் பெருமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**